# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 |
| | : | Prosecution - **DW-2** |
| Deposition of witness for | : | Defense |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அரவிந்த்குமார் | Father's Name : | | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 16th day of July 2025.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல், **2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்குமார்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**1** ஆம் எதிரி**, 2** ஆம் எதிரி**, 3** ஆம் எதிரி**, 4** ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டனர்**. 5** முதல் **11** எதிரிகள் ஆஜர்**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

**12** ஆம் எதிரி காணொலி மூலம் ஆஜர்**.** வழக்கறிஞர் ஆஜர்**.**

<u>முதல் விசாரணை</u>

இந்த வழக்கில் 7 ஆம் எதிரி ஆவேன். ஆஜர் எதிரகளில் எனக்கு தமிழரசன், செந்தில்குமார் ஆகியோர்களை தெரியும். காணொலியில் ஆஜராகியுள்ள எதிரி பஷீர் எனக்கு தெரியாது, நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள மற்ற எதிரிகளை தெரியாது. மேற்சொன்ன தமிழரசன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களை கிரிக்கெட் விளையாடும்போது எனக்கு தெரியும். வழக்கு சம்பவம் தேதியான 18.09.2020 அன்று நான் காதப்பாறை கிராமம், அருகம்பாளையம், ஸ்ரீ பாரி நகரில் குடியிருந்தேன். நான் டிசைன் பிளஸ் பிளஸ் என்ற கம்பெனியில் நான் சிஸ்டம் ஆப்ரேட்டராக வேலை பார்த்தேன். ஏழு வருடங்களாக நான் வேலை பார்த்தேன். 18.09.2020 அன்று உங்கள் வீட்டிலிருந்து கம்பெனிக்கு எப்படி வேலைக்கு சென்றீர்கள் என்றால் கார்த்திக்குமார் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் Scooty ல் எங்கள் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு சென்றோம். அன்றைய தினம் 9-9.10 மணிக்குள் நான் அலுவலகத்திற்கு சென்றேன். கார்த்திக்குமார் காலை 8.45 மணிக்கு என் வீட்டிற்கு வந்தார். நான் அலுவலகத்திற்கு உள்ளே சென்றால் Bio Matric மூலம் கைரேகை வைத்து அலுவலகத்திற்கு உள்ளே செல்வேன். நான் வேலை செய்யும்போது 350 நபர்கள் பணியில் இருந்தார்கள். கார்த்திக்குமார் நிறுவனத்திற்கு சென்றபிறகு எத்தனை மணிக்கு எப்போது பார்த்தீர்கள் என்றால் காலை 11.30 மணிக்கு பார்த்தேன். அதற்கு பிறகு 1-1.30 மணிக்கு பார்த்தேன். அதற்கு பிறகு மாலை 6.30 மணிக்கு டீ பிரேக்

சமயத்தில் பார்த்தேன். கார்த்திக் என்னை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார். 10 நாட்களுக்கு முன்பாக எனது வண்டி பழுதாகிவிட்டது. என்னை காவல் துறையினர் 27.09.2020 ல் கைது செய்தனர். மாலை 4 மணிக்கு என் அலுவலகத்தில் இருக்கும்போது கைது செய்தார்கள். 30.09.2020 அன்று என்னை நீதிமன்றம் அழைத்து சென்றார்கள். TN-63-AW-6699 என்ற கார் என்னுடையதாகும். அது சா.பொ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 27.09.2020 ஆம் தேதியன்று அந்த காரை என் வீட்டிலிருந்து காவல்துறையினர் எடுத்தார்கள். 17.09.2020 அன்று இரவு நான் என் வீட்டில் கொரோனா டைம்ஆக இருந்ததால் நான் வீட்டில் இருந்தேன். 17.09.2020 அன்று பொதுமக்கள் நடமாட இயலுமா என்றால் 6 மணிக்குமேல் யாரும் வீட்டை விட்டு வெளியே வரமுடியாது. அரசு தரப்பு கூறியதுபோல் வழக்கில் நான் ஈடுபடவில்லை.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.</u>

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

CCTV Footage நான் பணிசெய்த அலுவலகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ளது. Managing Partner கோபாலகிருஷ்ணன் நான் பணிசெய்த அலுவலகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார். நான் சிறையில் 149 நாட்கள் இருந்தேன், அதற்கு பின்னிட்டு ஆறு மாதங்கள் மேற்சொன்ன நிறுவனத்தில் பணிபுரிந்தேன். அதற்குபிறகு CCTV Footage ஐ சம்பவம் நடந்து இரண்டு வருடங்கள் கழித்து கோபாலகிருஷ்ணனிடம்

கேட்டு CCTV Footage, Punching Report ஆகியவை கேட்டேன், CCTV Footage ஆறுமாதங்கள்தான் இருக்கும் என்று தெரிவித்தனர். CCTV Footage இல்லாததால் அதனை Recovery செய்து கொடுத்தார்கள். 15 நாட்கள் முன்னாடிதான் 65B சான்றிதழ் நிறுவனத்தில் இருந்து வழங்கினார்கள். அது ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. **65B** சான்றிதழ் எ.த.சா.ஆ.**1** ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**. (CCTV Footage** ஆறு மாதத்திற்கு மேல் இருக்காது என்றும்**,** அழிந்துபோய் உள்ளது என்றும்**,** அதனை **Recovery** செய்திருப்பதாலும்**, 65B** சான்றிதழ் இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள இயலாது என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது**.)** ஆட்சேபனையுடன் **65B** சான்றிதழ் எ.ம.சா.ஆ.**1** மேற்சொன்ன ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது**.** பென் டிரைவ் எ.த.சா.ஆ.**2** ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**. DVD** எ.த.சா.ஆ.**3** ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**.** Pen Drive மற்றும் DVD நீதிமன்றத்தில் திரையிடப்பட்டது. DVD ல் உள்ளதும், Pen Drive ல் உள்ளதும் ஒரே படம்தான். 18.09.2020 அன்று 9.54.11 நிமிடத்திற்கு எதிரி அரவிந்த்குமார் கட்டம் போட்ட சாம்பல்நிற சட்டையை 9.42.11 மணி முழுக்கை சட்டையை மடித்துவிட்டு உள்ளே நுழையும் நபர் சாட்சியும் எதிரியுமான அரவிந்த்குமார். சாட்சி இருக்கையின் பின்னால் ஒரு பெண்மணி அமர்ந்துள்ளார்.

<u>சிறப்பு அரசு வழக்கறிஞர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கம்பெனியில் வேலை செய்ததற்காக அடையாள அட்டை கொடுத்தார்கள். நான் கம்பெனியில் இருந்து வெளியே செல்லும்போது மேற்படி அடையாள அட்டையை வாங்கிக்கொண்டார்கள். என்னுடைய கம்பெனியின் அடையாள அட்டையின் ID No.14 ஆகும். என்னுடைய செல்போன் எண்.9629234607 என்ற எண்ணுடைய நம்பரைதான் என் கம்பெனிக்கு கொடுத்திருந்தேன். தற்போதிலிருந்து நான்கு வருடத்திற்கு முன்பாக மேற்சொன்ன செல்போன் நம்பரை பயன்படுத்தினேன். மேற்சொன்ன ஒரு நம்பரை மட்டும்தான் நான் பயன்படுத்தி வந்தேன், வேறு நம்பர் இல்லை. 17.09.2020 அதாவது சம்பவத்திற்கு முதல் நாள் இரவு 8-9 மணி வரை நான் வீட்டில் இருந்தேன். நீங்கள் 17.09.2020 அன்று இரவு 8-9 மணி அளவில் எதிரி பிரேம்குமார் அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளீர்கள். நீங்கள்தான் எதிரி பிரேம்குமாரை மருத்துவமனைக்கு அனுமதித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தில் கொலையுண்டு இறந்துபோன கிருஷ்ணமூர்த்திக்கும், இந்த வழக்கில் இருந்து பிரிக்கப்பட்ட எதிரி பிரேம்குமாருக்கும் ஏற்பட்ட தகராறில் கொலையுண்டு இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி பிரேம்குமாரை தாக்கி காயம் ஏற்பட்டதால் நீங்கள்தான் அரசு மருத்துவமனைக்கு பிரேம்குமாரை அழைத்து சென்றுள்ளீர்கள் அதற்கான ஆவணம்தான் அ.த.சா.ஆ.21 ஆகும் என்று சொன்னால் சரியல்ல. 17.09.2020 ஆன தகராறின்போது உங்களுடன்

ஆஜர் எதிரிகள் தமிழரசன், செந்தில்குமார் ஆகியோர்கள் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 17.09.2020 இரவு 11 மணியளவில் உங்களுடன் பிரேம்குமார், தமிழரசன், செந்தில்குமார், கோகுலகிருஷ்ணன், துரைபாண்டி, R.S.மணி (எ) மணிகண்டன், கேசவன் ஆகியோர்கள் உடன் கரூர், அண்ணா நகர் கறிக்கடை சந்து பக்கத்தில் நீங்கள் அனைவரும் சேர்ந்து கிருஷ்ணமூர்த்தியை தீர்த்து கட்டவேண்டும் என்று சதித்தீட்டம் தீட்டிக்கொண்டிருந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சதித்தீட்டம் தீட்டிக்கொண்டிருந்தபோது சாட்சிகள் கார்த்திக், பிரவின் ஆகியோர்கள் நீங்கள் தீட்டிய சதித்திட்டத்தை கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

மாலை மணி **5.25** ஆகிவிட்ட காரணத்தினாலும்**,** வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்கவும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**.**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.